<u>கரூர் மாநகராட்சி</u>

**2024ம் ஆண்டு செப்டம்பர் 30ம்தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

<u>பொருள்கள்</u>

**1).** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் –2 வார்டு எண்.25 ல் உள்ள முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தில் தற்போது பின்புறம் இயங்கி வரும் தென்புறம் கட்டண கழிப்பறை பழுதடைந்துள்ளதால், அதனை இடித்து விட்டு மேற்படி இடத்தில் புதியதாக 6வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் வணிக வளாகம் கட்ட 2.85 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி விரைவில் தொடங்க உள்ளது.

எனவே முத்துக்குமாரசாமி பேருந்து நிலையத்தின் வடபுறம் நுழைவாயிலில் சேலம் பேருந்து நிறுத்தம் எதிர்புறம் உள்ள ஆண்கள் தனிக்கழிப்பறை 4 அறைகளும், பெண்களுக்கு தனிக்கழிப்பறை 4 அறைகளும் பராமரிப்பு செய்து பயன்படும் நிலையில் உள்ள கழிப்பிடங்களை ஏல நடவடிக்கை மேற்கொள்ள பொறியியல் பிரிவில் 23.08.2024 அன்று குறிப்பு பெறப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பறைகளை கட்டணக்கழிப்பிடமாக பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ள ஏல முன் வைப்புத்தொகை ரூ.5.00 இலட்சம் ஆக நிர்ணயம் செய்து பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது ஏல நடவடிக்கை மேற்கொண்டதையும் இம்மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**(அ6/ 7763/2020)**

**தீர்மான எண்.1988** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**2).**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டடு விட்டதால் 2015– 2016 முதல் 2017–2018 வரை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு திரு கே. ரமேஷ் ஒப்பந்ததாரர் விண்ணப்பம் செய்துள்ளார். பணிகள் முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் காலம் கடந்த வைப்புத் தொகையில் உள்ள வைப்புத்தொகையினை கீழ்க்கண்டவாறு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | ASD 5% | FSD 1% |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் –42ல் உள்ள சுக்காலியூர் பகுதியில் மண் சாலை மற்றும் பைப் சிறுபாலம் அமைத்தல் | 15000 | 3000 |
| 2 | வார்டு எண் –42ல் தென்றல் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 40000 | – |
| 3 | வார்டு எண்–36ல் சிறுபாலம் அமைத்தல் | 6000 | 30000 |
| 4 | காந்தி கிராமம் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை நீருற்று நிலையத்தில் சுற்று சுவர் அமைக்கும் பணி | 37232 | 7500 |
| 5 | கட்டளை தாந்தோணி தலைமை நீர் உற்று நிலையத்தில் மற்றும் கட்டளை நீர் உற்று நிலையத்தில் மின் அறை அமைத்தல் பணி | 47022 | – |
| 6 | வார்டு எண்–47ல் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி | – | 10000 |

| | | | |
|---|---|---|---|
| 7 | வார்டு எண்–36ல் பிள்ளையார் கோவில் பகுதியில் கிணறு துர் வாரும் பணி செய்தல் | 9914 | 2000 |
| 8 | வார்டு எண்–3 ஜெ ஜெ நகர் மற்றும் எல்லை கருப்பசாமி கோவில் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 25000 | 5000 |
| 9 | வார்டு எண்–12 ஜெ ஜெ தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் பணி | 24513 | 5000 |
| 10 | நெருர் நீர் உற்று தலைமையாகம் ஆற்று பகுதியில் தூய்மை செய்தல் பணி | 8750 | – |
| 11 | நெருர் நீர் உற்று தலைமையாகம் 4.50 mm சிவத்தல் பணி செய்தல் | 1350 | – |
| | **மொத்தம்** | **214781** | **62500** |

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம் (9083/2021/பி6)

**தீர்மான எண்.1989** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**3)** கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.43ல் இலங்கை அகதிகள் முகாம் பின்புறம் உள்ள அலுவலகம் பழுதடைந்துள்ளதால் அந்த பகுதிக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த சிறுபாலத்தில் பழுதுப்பணிகள் மேற்கொள்ளவும், வாஞ்சிநாதன் நகர் முதல் கிராஸ் தெருவில் வடிகாலில் கழிவு நீர் தேங்கி வெளியேறாமல் தேங்கி நிற்பதால் இப்பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படுவதால், சிறுபாலம் அமைத்து அருகிலுள்ள வடிகாலுடன் இணைக்க வேண்டியுள்ளது. மேலும் வார்டு எண்.45 வசந்தம் நகர் பகுதி மற்றும் வார்டு எண்.44 டி.என்.ஹச்.பி பகுதியில் சிறுபாலம் சிலாப் பழுதடைந்துள்ளதால் பழுதுப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட சிறுபாலங்களில் பழுதுப்பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4515/2024)**

**தீர்மான எண்.1990** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**4)** கரூர் மாநகராட்சி வாங்கல் சாலை அரசு காலனியிலுள்ள உரக்கிடங்கில் (மேற்கு பகுதி) தீ ஏற்படும் நேரங்களில் தீயணைப்பு துறை வாகனங்களுக்கு தண்ணிரை கொண்டும் அணைக்கும் பணியின் போது அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுவதால் வாங்கல் தலைமை குடிநீர் நீரேற்று நிலையத்திலிருந்து வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திற்கு செல்லும் 450 mm DI பம்பு குழாயிலிருந்து உரக்கிடங்கு பகுதியிலுள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிக்கு இணைப்பு பணிகள் மேற்கொள்ளவும், வாகனங்களுக்கு தண்ணீரை நிரப்பும் வகையில் குழாய் வசதிகள் (Hydrant) பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ3/ 4516 /2024)**

**தீர்மான எண்.1991** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

5)அரசாணை (நிலை) எண்.94 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.18.07.2024–ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் அல்லது தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்ட சுயசான்றின் அடிப்படையில் இணையவழி (Single window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு அதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்கள் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.800/– என நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து வரப்பெற்ற நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் கடித எண்.31917/2019/டிபி2, நாள்.25.07.2024ன்படி இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கட்டப்படும் அனைத்து உபயோக கட்டிடங்களுக்கும் ஏற்கனவே இம்மாநகராட்சியில் வசூலிக்கப்பட்டு வரும் கட்டணங்களுக்கு பதிலாக மேற்கண்ட அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள் (கட்டிட உரிம கட்டணம், அபிவிருத்திக்கட்டணம் மற்றும் தொழிலாளர் நலநிதி) வசூலித்து கொண்டு அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:–**

மாமன்றம் அனுமதிக்கலாம். **(3701/2024/எப்1)**

**தீர்மான எண்.1992** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6)** கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களின் கடை வாடகை மற்றும் குத்தகை இனங்களில் மாநகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட கீழ்க்கண்ட வழக்குகளில் மாநகராட்சி சார்பாக ஆஜரான திரு கே. பாலசுப்பிரமணி வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் வழங்க வேண்டி உள்ளது.

| வ.எண். | வழக்கு தொடுத்தவர் பெயர் | வழக்கு எண் | வழக்காடு கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 1 | கார்த்திகேயன் | WP(MD)No.14516/2023 | 9500 |
| 2 | என். ராஜம் | WP(MD)No.29641/2023 | 9500 |
| 3 | எம். கார்த்திகேயன் | WP(MD)No.29416/2023 | 9500 |
| 4 | ஆர். பிரபு | WP(MD)No.29638/2023 | 9500 |
| 5 | வி. நெடுஞ்செழியன் | WP(MD)No.29577/2023 | 9500 |
| 6 | அமானுல்லா மற்றும் பலர் | WP(MD)No.26982/2023 | 9500 x4<br>38000 |
| 7 | ஏ. அமானுல்லா | WP(MD)No. 29479/2023 | 9500 |
| | | **மொத்தம்** | **95000** |

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வரிசை எண்.1 முதல் 7 வரை உள்ள வழக்குகளில் மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடியமைக்காக வழக்காடு கட்டணம் மொத்த தொகை ரூ.95000/– ஐ திரு. கே. பாலசுப்பிரமணி வழக்கறிஞருக்கு வழக்காடு கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மாமன்றம் மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி, வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று, வழக்காடு கட்டணம் தொகை வழங்கப்பட்டதை இம்மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**( அ6/1255/2020)**

**தீர்மான எண்.1993** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

7)கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான வாங்கல் சாலை அரசு காலனி மேற்கு புறத்தில் அமைந்துள்ள உரக்கிடங்கில் 30.06.2024 தீப்பற்றி எரிவரை அமைக்கத் தீயணைப்பு வாகனங்களுக்கு தேவையான அளவு தண்ணீர் வழங்குவதற்கு தண்ணீர் லாரிகள், Hitachi

இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் சப்ளை செய்யும் பணி ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | RPS Construction, Karur | 0.04% குறைவு |
| 2) | M.Loganathan, Karur | 0.82% அதிகம் |
| 3) | M/S.CVM & Co, Karur | 2.01% அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.RPS Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத்தொகை ரூ.6,25,000/–ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். இ1/3277 /2024

**தீர்மான எண்.1994** பதிவு செய்யப்பட்டது

**8).** கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.36,37,43,44,45,46,47 மற்றும் 48 ஆகிய 8 வார்டு பகுதிகளிலுள்ள 237 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மின் விசைப் பம்புகளில் ஏற்படும் பழுதுகள், கேபிள்கள் ஆழ்துளை கிணறுகளிலுள்ள குழாய்கள் மாற்றுதல், ஸ்டாட்டர், பேனல்போர்டு பழுதுப்பணிகள், குழாய் பழுது பணிகள் பழுதடைந்து சின்டெக்ஸ் டேங்குகளுக்கு பதிலாக புதியதாக மாற்றும் ஆகிய பழுது பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ3/3730/2023)**

**தீர்மான எண்.1995** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கருப்பாயி கோவில் இறக்கம் மனித குழி எண்.16 முதல் மனித குழி எண்.18 வரை உள்ள 60 மீட்டர் துாரத்திற்கு பாதாள சாக்கடை மெயின் லைன் 600 mm RCC Pipe அரிப்பு ஏற்பட்டு முழுவதும் சேதமடைந்து கழிவு நீர் செல்ல முடியாமல் தேக்கம் ஏற்பட்டு, பொதுமக்கள் செல்லும் சாலையில் வழிந்தோடுவதால் பொது சுகாதார கேடு ஏற்படும் அபாயமாக உள்ளதால் 60 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே சேதமடைந்த 600 mm ஆர்.சி.சி பைப்புகளை அகற்றி புதிதாக 600mm Non pressure Pipe (nP4 class) புதிதாக மாற்றியமைக்கும் பணிக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1 | M/s.Sunmathi Construction, Karur | 0.09% Less |
| 2 | M/s.P.K.Builders, Karur | 1.44% above |
| 3 | Thiru.G.Nanthakumar, Karur | 2.14% above |

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.20.00 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (இ5/7994 /2023)

**தீர்மான எண்.1996** பதிவு செய்யப்பட்டது

**10)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 கருப்பாயி கோவில் இறக்கம் மனித குழி எண்.18 முதல் மனித குழி எண்.19 வரை உள்ள 40 மீட்டர் துூரத்திற்கு பாதாள சாக்கடை மெயின் லைன் 600 mm RCC Pipe அரிப்பு ஏற்பட்டு முழுவதும் சேதமடைந்து கழிவு நீர் செல்ல முடியாமல் தேக்கம் ஏற்பட்டு, பொதுமக்கள் செல்லும் சாலையில் வழிந்தோடுவதால் பொது சுகாதார கேடு ஏற்படும் அபாயமாக உள்ளதால் 40 மீட்டர் நீளத்திற்கு ஏற்கனவே சேதமடைந்த 600 mm ஆர்.சி.சி பைப்புகளை அகற்றி புதிதாக 600mm Non pressure Pipe (nP4 class) புதிதாக மாற்றியமைக்கும் பணிக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.12.60 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1 | M/s.Sunmathi Construction, Karur | 0.10% Less |
| 2 | M/s.P.K.Builders, Karur | 1.21% above |
| 3 | Thiru.G. Nanthakumar, Karur | 2.34% above |

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7) ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த M/s.Sunmathi Construction, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.12.60 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம். (இ1/ 7993 /2023)

**தீர்மான எண்.1997** பதிவு செய்யப்பட்டது

**11)**கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.25ல் உள்ள முத்துக்குமாரசாமி பேருந்து நிலையம் A பிரிவு பேருந்து நிலையம் புதுப்பித்து தர மாநகராட்சி ஆணையர் அவர்களின்

கடிதத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலரின் வாகன ஆய்வாளர் அவர்கள் 16.07.2024ம் தேதி நேராய்வு மேற்கொண்ட போது பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாகங்கள் பராமரிப்பு பணிகள், பழுதுகள் ஏற்பட்ட தூண்கள், Roof Slab Concrete, பூச்சு மற்றும் வர்ணம் அடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் பேருந்து நிறுத்தும் தளம், பழுது ஏற்பட்ட இடங்களில் கான்கீரிட் தளம் அமைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பேருந்து நிலையம் கட்டி சுமார் நாற்பது ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் வணிக வளாகங்கள் அதிக அளவில் பழுது ஏற்பட்டு அதன் உறுதித்தன்மை அறியப்பட்டுள்ளது. பேருந்து நிலைம் புதுப்பிக்கும் பொருட்டு தூண்கள் உறுதிப்படுத்தவும், Roof Concrete Ceiling பழுது பார்க்கவும், பூச்சு வேலை செய்யவும் பேருந்து நிறுத்தம் மற்றும் செல்லும் பாதையில் பழுது ஏற்பட்ட கான்கீரிட் தளத்தை புதியதாக அமைக்கவும் பெயிண்டிங் அடிக்கவும், கழிப்பறையில் பழுது ஏற்பட்டதை சரி செய்யும் பணிக்கு முதன்முறையாக 31.07.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 11.00லட்சம்</u>**

1. M/s.Eagle Packers. Karur மதிப்பீட்டைவிட 0. 02 %சதம் குறைவு
2. M/s.RPS Construction. Karur மதிப்பீட்டைவிட 12.11%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Eagle Packers. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/2935/2024)

**தீர்மான எண்.1998** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**12)** கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். எச்.2/10907/2024, நாள்.27,.07.2024ல் தெரிவித்துள்ளதற்கிணங்க கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48ல் மாவட்ட விளையாட்டு அரங்கு மைதானத்தில் 15.08.2024 அன்று சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்காக கரூர் மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் சாமியானா பந்தல் அமைத்தல், வி.ஐ.பி சேர், அலுவலர்களுக்கான 'S' Type Chair மற்றும் பயனாளிகளுக்கான பிளாஸ்டிக் சேர்கள், மைக் செட், ஜெனரேட்டர் வசதி , Floor mat மற்றும் சீரியல் செட் அமைத்தல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக 12.08.2024ல் ஓப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50லட்சம்</u>**

1. M/s.S.A Groups, Karur மதிப்பீட்டைவிட0.06%சதம் குறைவு
2. M/s.ACG Ventures, Karur மதிப்பீட்டைவிட 1.04%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு அவசர கூட்ட தீர்மானம் எண். 1943 , நாள். 08.08.2024 ம் தேதி

ரூ.1.50 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.S.A Groups, Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.

3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
(இ1/3892 /2024)

**தீர்மான எண்.1999** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

13)கரூர் மாநகராட்சியானது 2011 மக்கள் தொகை கணக்கின்படி 2,14,412 நபர்கள் கொண்ட மாநகராட்சியாகும், கரூர் மாநகராட்சியானது கரூர், இனாம் கரூர், தாந்தோணி மற்றும் சணப்பிரட்டி பகுதிகளை உள்ளடக்கியதாகும். கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் பாதாள சாக்கடை திட்டமானது 30.04.2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி திட்டமானது 3013 மனித ஆய்வுக்குழிகள் 88.90 கி.மீ பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் 2.77 கி.மீ கழிவு நீரேற்று நிலைய குழாய்கள் மற்றும் ஒரு பிரதான கழிவு நீரேற்று நிலையம் மற்றும் இரண்டு கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் 15.00 MLD கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. மேற்படி திட்டத்தில் 15000 கழிவு நீர் வீட்டிணைப்புகள் திட்ட அறிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் செயல்படுத்தும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்புகளை நீக்குவதற்கு சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவு நீருந்து நிலையங்கள் இயக்குவதற்கு மாநகராட்சி பணியாளர் இல்லாத காரணத்தால் வெளிகொணர்வு முகமை மூலம் (Out sourcing) பணிகள் வழங்குவது மிகவும் அவசியமாகிறது. மேலும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.23656/2013/டிஒ, நாள்.04.02.2016ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்.அதன் வரன்முறையில் தற்போது மாநகராட்சி நிதி நிலைமையை கருத்தில் கொண்டு குறைந்தபட்சமாக மேற்படி பணிக்கு அத்தியவசியமாக 29 நபர்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறார்கள்.

| வ.எண் | பணியாளர்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேதியல் ஆய்வாளர் | 1 |
| 2 | எலக்டீரிக்கல் மேஸ்திரி | 2 |
| 3 | ஆய்வர் உதவியாளர் | 1 |
| 4 | பிட்டர் கிரேடு –1 | 2 |
| 5 | பிளாண்ட் ஆப்ரேட்டர் | 4 |
| 6 | பணி ஆய்வர் | 2 |
| 7 | கிளீனர் | 3 |
| 8 | மஸ்டூர் கிரேடு 1 (வாட்ச்மேன்) | 3 |
| 9 | சீவர் லேபர் (sewer labour) | 11 |
| | **மொத்தம்** | **29** |

மேற்படி 29 நபர்கள் பணி புரிவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தே மதிப்பீட்டுத் தொகை 5 மாத காலத்திற்கு (01.09.2024 முதல் 31.01.2025) ரூ.33,42,000/–ஐ முதன் முறையாக 29.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.33,42,000/–**</u>

1. M/S.Tamil Nadu Water supply and Drainage system, Namakkal,
மதிப்பீட்டைவிட0.85%சதம் குறைவு

2. M/s.JPC, Namakkal மதிப்பீட்டைவிட 1.36%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1867, நாள்.28.06.2024ம் தேதி ரூ.33,42,000/—க்கு பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S.Tamil Nadu Water supply and Drainage system, Namakkal, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ5/110/2024)

**தீர்மான எண்.2000** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**14)**கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.11 அண்ணா வளைவு வாங்கல் மெயின் ரோடு பாதாள சாக்கடை 800 mm மெயின் லையன் மனித குழி எண். NIS (N) 57 முதல் மனித குழி எண். NIS (N) 58 வரை உள்ள ஆர்.சி.சி குழாயை சுமார் 30 மீட்டர் நீளத்திற்கு அரிப்பு ஏற்பட்டு, ஆர்.சி.சி குழாயை முழுவதும் சேதமடைந்து, கழிவு நீர் செல்லமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கரூர் பகுதி மற்றும் இனாம் கரூர் பகுதிகளில் கழிவு நீர் நிரம்பி சுகாதார கேடு ஏற்படும் நிலையாக இருப்பதாலும் தற்சமயம், பருவமழையின் காரணமாக மிக பெரிய பள்ளம் ஏற்பட்டு, பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்ல முடியாமல் இருப்பதால் சேதமடைந்த குழாயை புதியதாக மாற்றிஅமைக்கும் பணிக்கு முதன்முறையாக 06.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.19.00லட்சம்**

1. M/s.RPS Construction. Karur, மதிப்பீட்டைவிட 0.03%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 0.81%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.RPS Construction. Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், பணி உத்திரவு வழங்கியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் (இ5/ 4213/2024)

**தீர்மான எண்.2001** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**15)** கரூர் மாநகராட்சி மண்டலம் –1 வார்டு எண்.1 முதல் 10 மற்றும் 28 வரை உள்ள பகுதிகளுக்கு வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்திலிருந்து பொதுமக்களுக்கு சுகாதாரமான குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் அடிக்கடி ஏற்படும் மின் தடையின் போது 200 கே..வி.ஏ ஜெனரேட்டர் கொண்டு இயக்கப்பட்டு தொடர்ந்து காலதாமதமின்றி குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் 200 கே.வி.ஏ ஜெனரேட்டர் சர்வீஸ் செய்து மூன்றாண்டுக்கு மேல் ஆகியுள்ளதால் முழு நேர மின் தடையின் போது

தொடர்ந்து ஜெனரேட்டர் இயக்க முடியவில்லை. எனவே வாங்கப்பாளையம் நீருந்து நிலையத்தில் உள்ள **200** கே.வி.ஏ ஜெனரோட்டரை சர்வீஸ் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக **06.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.80லட்சம்**

1. M/s.AS Power Solution, Trichy மதிப்பீட்டைவிட**0.50**%சதம் குறைவு
2. M/s.ASV Construction , Trichy மதிப்பீட்டைவிட 5.94%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**1958**, நாள்.**08.08.2024**ம் தேதி ரூ.**1.80** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.AS Power Solution, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ3/ **3728** /2024)

**தீர்மான எண்.2002** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**16)**கரூர் மாநகராட்சி மண்டலம் **–4**ல் பொன்நகர் நீருந்து நிலையத்தில் உயர் மின் அழுத்தம் காரணமாக செல்லாண்டிபாளையம் **25** HP மின் மோட்டார் பழுதடைந்துள்ளதால் பொன்நகர் **30** HP மின் மோட்டாரில் Starter Timer மற்றும் செல்லாண்டிபாளையம் **25** HP மின் மோட்டாரில் காயில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால், மாற்று மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே பழுதடைந்துள்ள செல்லாண்டிபாளையம் 25 HP மின் மோட்டார்களை வெளியே எடுத்து பழுதுப்பணிகள் மேற்கொண்டு மீண்டும் பொருத்துதல் மற்றும் பொன்நகர் **30** HP மின் மோட்டாருக்கு Starter Timer பொருத்துதல் பணிகளை மேற்கொள்ளும் பணிக்கு முதன்முறையாக **06.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.15லட்சம்**

1. M/s.AS Power Solution, Trichy மதிப்பீட்டைவிட**0.50**%சதம் குறைவு
2. M/s.ASV Construction , Trichy மதிப்பீட்டைவிட 2.18%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**1942**, நாள்.**08.08.2024**ம் தேதி ரூ.**1.15** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.AS Power Solution, Trichy அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ3/ /2023)

**தீர்மான எண்.2003** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**17)**கரூர் மாநகராட்சி மண்டலம் **1,2,3** மற்றும் **4** ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட **48** வார்டு பகுதிகளில் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுக்கூட்டங்கள் நேரடி தல ஆய்வுகள் மற்றும் மாநகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை சமூக ஊடகங்களான Twitter, Face book, Whats app, Instagram மற்றும் சமூக வலைதளங்களில் பதிவேற்றம் செய்யவும் மேலும் பொதுமக்களிடமிருந்து சமூக ஊடகம் மற்றும் வரைதளங்கள் மூலம் வரப்பெறும் குறைகளை கண்காணித்தல் ஆகிய பணிகளை தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி நிர்வகிக்கவும், பராமரிக்கவும் மாதம் ஒன்றிற்கு ரூ.**1,00,000/–** வீதம் ஒரு வருடத்திற்கு ரூ **12,00,000/–** மதிப்பீட்டில் சமூக ஊடகம் பராமரிப்பு பணிக்கு முதன்முறையாக **18.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95லட்சம்</u>**

1. M/s.Zhocos Private Limited, Chennai மதிப்பீட்டைவிட**0.05%**சதம் குறைவு
2. M/s.Brand New Technology, Chennai மதிப்பீட்டைவிட 0.54%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.**1917**, நாள்.**08.08.2024**ம் தேதி ரூ.**12.00** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Zhocos Private Limited, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம்.

(இ**1**/ **3510**/2024)

**தீர்மான எண்.2004** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**18)**கரூர் மாநகராட்சி பொறியாளர்பிரிவு வாகன எண்.TN47 AF2941 தெருவிளக்கு தானியங்கி வாகனத்திற்கு **2024–2025**ம் ஆண்டிற்கான தகுதி சான்று புதுப்பிக்க தேவையான மராமத்து பணிகள் மேற்கொள்ள வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **31.07.2024**ம் தேதி அன்று முன் அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் வாகனத்தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையான TVS Mobility Private Ltd, Karur என்ற நிறுவனத்திடம் நேரடியாக பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.**2,44,500/–**ஐ இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

**1.**மாமனறம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி செலவினத்தொகை ரூ.**2,44,500/–**ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**3.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்

**(3462/2024/இ7)**

**தீர்மான எண்.2005** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**19)** கரூர் மாமன்ற **08.08.2024** ஆம் தேதிய அவசரக்கூட்ட தீர்மானம் எண்.**1982**—ல் கரூர் மாநகராட்சி மண்டலம்—**3**க்குட்பட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல்புறம் சிறு வணிகர்கள் வரைமுறை இல்லாமல் கடைகளை அமைத்து மாநகராட்சிக்கு எந்த ஒரு வருவாயும் இல்லாமல் இயங்கி வருவதால், அந்த கடைகளை எடுத்து வணிகர்களின் வாழ்வாதாரம் பாதிக்காமல் அதே இடத்தில் மாநகராட்சிக்கு வருவாய் வரும் விதத்தில் காலியிடம் வாடகை நிர்ணயம் செய்து மாநகராட்சிக்கு வருமானம் பெருக்க, நடவடிக்கை எடுக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள இடமானது, சணப்பிரட்டி கிராமம் புல எண்.**1490**/பகுதி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் வணிக வளாகம் என ஒதுக்கீட்டு செய்யப்பட்ட இடம் மற்றும் மாநகராட்சிக்கு சொந்தமான புல எண்.**1481**/பகுதி காலியிடம் என மொத்தம் **0.97** ஏக்கர் நிலம் இதுநாள் வரை எந்தவொரு பயன்பாட்டிலும் இல்லாமல் காலியிடமாக உள்ளது.

எனவே, மாநகராட்சியின் வருவாய் பெருக்கும் விதமாக, **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 78 உட்பிரிவு—3—ன்** படி, மாநகராட்சிக்கு எந்தவொரு நிலம் அல்லது கட்டடத்தினையும் பயன்படுத்துவதற்கு மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு, வாடகை செலுத்துவதன்பேரில் விதிகளின் படி எந்தவொரு நபருக்கும் உரிமம் அல்லது குத்தகை வழங்கலாம் எனவும், **தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316—ன்** படி, மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தை வணிக பயன்பாட்டிற்கு தரைவாடகை நிர்ணயம் செய்ய, நிலத்தின் வழிகாட்டி மதிப்பில் மூன்று சதவிகிதம் என்ற அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்து ஏல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளதால், மேற்கண்ட தீர்மானத்தின் படி, மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி இடத்தை காலியிடமாக வாடகை நிர்ணயம் செய்தும், ஏல முன் வைப்புத்தொகை ரூ.**5000/—** நிர்ணயம் செய்யவும், விதிகளின் படி சதுரடி வாடகை மதிப்பு நிர்ணயம் செய்தும் ஏல நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மாமன்றம் அனுமதிக்கலாம். (அ6/ 4355/2024)

**தீர்மான எண்.2006** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

20) அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**24.06.2022ல்** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 விதி 8ல் தெரிவிக்கப்பட்டுள்ள படி மாநகராட்சி /நகராட்சிகளில் வார்டு**களை பகுதிகளாக** பிரித்து வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா அமைக்கவும், அரசாணை (நிலை) எண்.93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.06.2022ல் மேற்படி குழுவின் செயல்பாடுகள் குறித்தும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடைபெற வேண்டும் **என அறிவுறுத்தப்பட்டுள்ளது**. **அதன்படி** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம் 2க்குட்பட்ட 15 வார்டு**களில்** , ஒரு வார்டில் நான்கு இடங்**கள் வீதம்** 60 இடங்களில் சபா கூட்டம் நடத்திடத் தேவையான சாமியானா பந்தல், நாற்காலிகள், மைக்செட் வசதிகள், மேட் அமைத்தல் போன்ற பணிகளை வாடகை அடிப்படையில் மேற்கொள்ள ஒரு இடத்திற்கு ரூ.10500/- வீதம், 60 இடங்களில் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6,30,000/- **க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதி எண்**.57(7)**ன் கீழ் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை** மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1) | Thiru.Vinayaga Sound Service, Semmadai | 0.11% மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2) | Thiru.R.K.SakthivelAudios,Rameshwarapatty Karur | 2.58% அதிகம் |
| 3) | Thiru.Sri Iniya Murugan, Vengamedu, Karur | 3.90% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதி எண்**.57(7)**ன் கீழ் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில்** குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Thiru.Vinayaga Sound Service, Semmadai, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுவேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்தற்கான செலவினத் தொகை ரூ.6,25,092/-;**க்கு** மாநகராட்சி வருவாய்நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் பதிவு செய்யலாம்.

(இ1/ 5707 / 2024)

**தீர்மான எண்.2007** பதிவு செய்யப்பட்டது

**21)** அரசாணை (நிலை) எண்.**92**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**24.06.2022 ல்** தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** விதி **8ல்** தெரிவிக்கப்பட்டுள்ள படி மாநகராட்சி /நகராட்சிகளில் வார்டு**களை பகுதிகளாக** பிரித்து வார்டு கமிட்டி மற்றும் பகுதி சபா அமைக்கவும், அரசாணை (நிலை) எண்.**93**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**24.06.2022**ல் மேற்படி குழுவின் செயல்பாடுகள் குறித்தும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை வார்டு குழு மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடைபெற வேண்டும் **என அறிவுறுத்தப்பட்டுள்ளது**. **அதன்படி** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மண்டலம் **4**க்குட்பட்ட **8** வார்டு**களில்** , ஒரு வார்டில் நான்கு இடங்க**ள் வீதம் 32** இடங்களில் சபா கூட்டம் நடத்திடத் தேவையான சாமியானா பந்தல், நாற்காலிகள், மைக்செட் வசதிகள், மேட் அமைத்தல் போன்ற பணிகளை வாடகை அடிப்படையில் மேற்கொள்ள ஒரு இடத்திற்கு ரூ.**10500**/- வீதம், **60** இடங்களில் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**3,36,000**/- **க்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதி எண்**.57(7)**ன் கீழ் விலைப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை** மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவிகிதத்தில் |
|---|---|---|
| 1) | Thiru.R.K.SakthivelAudios,Rameshwarapatty Karur | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2) | Thiru.Vinayaga Sound Service, Semmadai | 1.56% அதிகம் |
| 3) | Thiru.Sri Iniya Murugan, Vengamedu, Karur | 3.58% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி **தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதி எண்**.57(7)**ன் கீழ் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில்** குறைந்த

விலைப்புள்ளி அளித்துள்ள Thiru.R.K.SakthivelAudios, Rameshwarapatty Karur, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்றுவேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்ததற்கான செலவினத் தொகை ரூ.241779/-;**க்கு** மாநகராட்சி வருவாய்நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் பதிவு செய்யலாம். (இ1/ 5707 / 2024)

**தீர்மான எண்.2008** பதிவு செய்யப்பட்டது

**22)** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட அரசு காலனியில் இயங்கி வரும் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கரூர் மற்றும் இனாம் கரூர் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கரூர் மாவட்ட மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து வரப்பெற்ற கடித எண் Lr No–F.KAR 0462/RS/DEE/TNPCB/KAR/2024 நாள்**19.03.2024** கடிதத்தின்படி **2024–2025** ஆம் ஆண்டிற்கான மாசுக்கட்டுபாடு வாரியம் மூலமாக புதுப்பித்தல் சான்று பெறுவதற்கான தொகை ரூ **43,600/–**District Enviranmental Engineer Tamil Nadu Pollution Control Board க்கு வழங்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் கரூர் அவர்களின் கடிதத்தின்படி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மாசுக்கட்டுப்பாடு வாரிய சான்று பெறுவதற்கான தொகை ரூ.**43600/–**ஐ (ரூபாய் நாற்பத்தி மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) District Enviranmental Engineer Tamil Nadu Pollution Control Board க்கு குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வழங்க மாமன்றம் அனுமக்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை ரூ**43600/–**ஐ வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ5/4671/2012)**

**தீர்மான எண்.2009** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**23)**தமிழ்நாடு முதலமைச்சரின் மூன்றாண்டு சாதனைகளாக கரூர் மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விபரம் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளின் விபரங்களை **31.08.2024**ம் தேதியில் தினகரன்நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ.**25200/–** KAL PUBLICATIONS (p) LTD, TRICHY நாளிதழில் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.**25200/–** வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 4401/2024)**

**தீர்மான எண்.2010** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**24)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **11** மற்றும் **28** வார்டுகளை கொண்டு மண்டலம் **1** ஆக செயல்பட்டு வருகிறது. கரூர் மாநகராட்சி உருவாக்கப்பட்ட பிறகு மண்டலம்

1க்கு மண்டலத்தலைவர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களை கொண்டு மாதாந்திர மாமன்ற கூட்டம் மற்றும் அலுவலகப்பணிகள் நடைபெறுவதற்கு மாநகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடம் எதுவும் இனாம் கரூர் பகுதிகளில் இல்லாத காரணத்தினாலும் பொதுமக்கள் தங்கள் சொத்து வரி மற்றும் குடிநீர் வரி செலுத்த வசதிக்காக மெயின் ரோட்டில் அலுவலகம் அமைக்கும் பொருட்டு, மண்டலம் 1 அலுவலகத்திற்கு வாங்கப்பாளையம் மெயின் ரோட்டில் அமைந்துள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய அலுவலகத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் மண்டலம் –1 அலுவலகம் இயக்க கதர்வாரிய அலுவலகம் பின்புறம் உள்ள சுமார் 24.85x12.30 மீட்டர் பரப்பளவுக் கொண்ட கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பொதுப்பணித்துறை விலைப்பட்டியல் தெரிவித்துள்ளவாறு PWD Shedule 2022-2023ன்படி வாடகை மாதம் ஒன்றிக்கு ரூ.30355/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் கட்டிடத்தில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 2022 முதல் ஜீன் 2023 வரை 11 மாதத்திற்கு வாடகை பாக்கி ரூ.3,33,905/. செலுத்த மாமன்ற தீர்மான எண்.1312, நாள்.27.07.2023ல் ஒப்புதல் பெறப்பட்டு இவ்வலுவலகத்தில் இருந்து காசோலை எண்.004299, நாள்.19.01.2023 அன்று உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில் வாரியம், கரூர் அவர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.118/2022/கே, நாள்.04.11.2023 அன்று கடிதத்தில் ஜீ.எஸ்.டி தொகையுடன் வாடகையினை வழங்குமாறு கேட்டுள்ளார். மேற்காணும் கடிதத்தில் தெரிவித்தவாறு GST 18 % 11 மாதத்திற்கு ரூ.60,104./–ம் மேலும் ஜீலை 2023 முதல் ஆகஸ்டு 2024 வரை வாடகை தொகை GST 18 % உட்பட மாதம் ஒன்றிற்கு ரூ.35819/– வீதம் 14 மாதத்திற்கு ரூ.5,01,466/– ஐ (ஆக மொத்தம் ரூ.60,104 +5,01,466=5,61,570/–) உதவி இயக்குநர், கதர் கிராமத் தொழில்கள், கரூர் அவர்களுக்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் மண்டலம் – 1 அலுவலகம் இம்மாநகராட்சி மூலமாக புதிய கட்டிடம் கட்டும் வரை கதர் கிராம தொழில் வாரியம் கட்டிடத்தில் பயன்படுத்தி கொள்வதற்கு பொதுப்பணித்துறையின் விலை விகித அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட மாத வாடகை ரூ.30355/–ம் அதற்கான GST 18 % தொகையும் செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கான செலவினத் தொகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/2796 /2022)**

**தீர்மான எண்.2011** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

25) கரூர் மாநகராட்சி மண்டலம் –1க்குட்பட்ட வார்டு எண்.28 திருக்காம்புலியூர் மற்றும் வடிவேல் நகர் பகுதிகளுக்கு சேலம் பைபாஸ் ரோடு மாரியம்மன் கோவில் கிணற்றிலிருந்து தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது மேற்காணும் கிணற்றில் உள்ள 10 எச்.பி மின் மோட்டார் காயில் பழுது ஏற்பட்டுள்ளதால் 10 எச்.பி மின் மோட்டாரை சரி செய்யவும், G.I பைப்களை மாற்றியமைக்கும் பணிக்கு முதன்முறையாக 22.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 0.59லட்சம்**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.08%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட 1.00%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1791, நாள்.29.02.2024ம் தேதி ரூ.0.59 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் ஏற்கலாம். (இ3/779/2024)

**தீர்மான எண்.2012** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

26) கரூர் மாநகராட்சி மண்டலம் –4 தாந்தோணிமலை பகுதியில் உள்ள பொன் நகர் நீருந்து நிலையத்திற்கு செல்லும் 165 எச்.பி மின் மோட்டார் KFW திட்டத்தில் கட்டளை தலைமை நீரேற்று நிலையத்தில் 2016ஆம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி 165 எச்.பி மின் மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே மேற்படி மின் மோட்டார்களை பழுது பணி மேற்கொள்வதற்கு முதன்முறையாக 22.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 1.95லட்சம்**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.08%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட 1.00%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1742, நாள்.29.02.2024ம் தேதி ரூ.1.95 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ3/774/2024)

**தீர்மான எண்.2013** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

27) கரூர் மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட பகுதிகளுக்கு பாலம்மாள்புரம் நீருந்து நிலையத்தில் 40 எச்.பி மின் மோட்டார் மூலம் பசுபதிபாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் ஏற்றி அப்பகுதிகள் மற்றும் இதர பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி மின் மோட்டார் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலையில் உள்ளதால் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு முடியாமல் உள்ளதால் மின் மோட்டாரை பழுது பார்க்கும் பணிக்கு முதன்முறையாக 22.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 1.00லட்சம்**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.08%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட 1.00%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1741, நாள்.29.02.2024ம் தேதி ரூ.1.00 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ3/772/2024)

**தீர்மான எண்.2014** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

28) கரூர் மாநகராட்சி மண்டலம் –3 வார்டு எண்.12,13,16 மற்றும் 19 ஆகிய பகுதிகளுக்கு நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 110 திட்டத்தின் கீழ் நீருந்து கிணற்றில் உள்ள 40 எச்.பி மின் மோட்டார் பொருத்தப்பட்டு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது 40 எச்.பி மின் மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே மேற்படி 40 எச்.பி மின் மோட்டாரினை பழுது பணிகள் மேற்கொள்வதற்கு முதன்முறையாக 22.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 1.36லட்சம்**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.08%சதம் குறைவு
2. M/s.Navaladiyan Electrical and Rewinding works. Karur மதிப்பீட்டைவிட 1.01%சதம் அதிகம்

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்.1790, நாள்.29.02.2024ம் தேதி ரூ.1.36 லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம் (இ3/773/2024)

**தீர்மான எண்.2015** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

29)கரூர் மாநகராட்சி மண்டலம் –4 வார்டு எண்.48ல் வெங்கக்கல்பட்டி முதல் சுங்ககேட் வரை மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையின் இருபுறமும் புதியதாக மழை நீர் வடிகால் கட்டுதல் மற்றும் சாலையின் அகலத்தை விரிவாக்கம் செய்து பேவர் பிளாக் கற்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் வடிகால் அமைக்கும் இடத்திலேயே குடிநீர் பகிர்மானக்குழாய்கள் உள்ளதால், மழை நீர் வடிகால் அமைக்கப்படும் பொழுது பி.வி.சி பகிர்மானக்குழாய்கள் பழுதடைந்துள்ளதால், வெங்கக்கல்பட்டி, ஏமூர் சாலை , காளியப்பனூர் ராசி நகர், ஆகிய குடியிருப்பு பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது.

வார்டு எண்.48 ல் பழைய திண்டுக்கல் சாலை கிழக்கு பகுதியில் ஏமூர் சாலை சந்திப்பு முதல் காளியப்பனூர் வரை, காளியப்பனூர் முதல் முத்தலாடம்பட்டி வரை, ஏமூர் சாலை சந்திப்பு முதல் வெங்கக்கல்பட்டி ரவுண்டானா வரை மற்றும் மேற்குபகுதியில் வெங்கக்கல்பட்டி ரவுண்டானா பகுதியில் புதியதாக 160 mm dia மற்றும் 110 mm dia PVC பகிர்மானக்குழாய்கள் அமைக்கும் பணிக்கு முதன்முறையாக 09.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 32.00லட்சம்</u>**

1. M/s.Mallika Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.02%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan. Karur மதிப்பீட்டைவிட 0.67%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/3669/2024)

**தீர்மான எண்.2016** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

30)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –4 வார்டு எண்.46 செல்லாண்டிபாளையம் பிரதான மாநில நெடுஞ்சாலைத்துறை சாலையில், மாநில நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலை விரிவாக்கப்பணிகள் (பேவர் பிளாக்) நடைபெற்று வருவதால் இச்சாலையில் வடபுறத்தில் 4வது குறுக்கு தெரு முதல் மதுரை வீரன் கோவில் வரை மாநகராட்சியின் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் பழுதடைந்துள்ளதால் உடனடியாக 110mm PVC குடிநீர் பகிர்மானக்குழாய்கள் பதிக்க வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி முழுவதும் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் புதியதாக அமைத்தல் பணிக்கு முதன்முறையாக 09.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 8.00 லட்சம்</u>**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட 0.07%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan. Karur மதிப்பீட்டைவிட 0.81%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/ 4220 /2024)

**தீர்மான எண்.2017** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**31)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் **–4** வார்டு எண்**.46,47**ல் செல்லாண்டிபாளையம் பிரதான நெடுஞ்சாலைத்துறை சாலையில் தெற்கு புறத்தில் மாநில நெடுஞ்சாலைதுறை மூலம் சாலை விரிவாக்க பேவர் பிளாக் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால் இச்சாலையின் ஒரத்தில் பதிக்கப்பட்டிருந்த மாநகராட்சியின் குடிநீர் பிரதான மற்றும் பகிர்மானக்குழாய்கள் பழுதடைந்துள்ளதால் இப்பகுதியில் குடிநீர் விநியோகம் செல்ல இயலவில்லை**.** மேற்கண்ட செல்லாண்டிபாளையம் பிரதான சாலையின் தெற்குபுறத்தில் (பகவதியம்மன் கோவில் முதல் தார் குடோன் வரை) குடிநீர் பிரதான மற்றும் குடிநீர் பகிர்மானக்குழாய்கள் பதித்தல் பணிக்கு முதன்முறையாக **09.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன**.** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது**.**

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 13.50 லட்சம்</u>**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட **0.04**%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan. Karur மதிப்பீட்டைவிட 0.79%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்**.**
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கான செலவினத் தொகையை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்**.** **(இ2/4006** /2024)

**தீர்மான எண்.2018** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

**32)**கரூர் மாநகராட்சி மண்டலம் **–4** வார்டு எண்**.36,37,43,44,45,46,47** மற்றும் **48** பகுதிகளிலுள்ள மொத்தம் **237** ஆழ்துளை கிணறுகளில் சிறிய மின் விசைப்பம்பு மூலம் இயக்கப்பட்டு குடிநீர் அல்லாத நீரை சின்டெக்ஸ் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது**.** இந்த ஆழ்துளை கிணறுகளிலுள்ள மின் மோட்டார்களில் பழுதுகள் ஏற்பட்டு, மீண்டும் பழுதுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள மின்மோட்டார்களை அகற்றி அதற்கு பதிலாக புதிய மின் மோட்டார்கள் பொருத்த வேண்டியுள்ளது. இதில் வார்டு எண்**.45** ராயனூர் நேதாஜி நகர், பழைய எஸ்.பி.ஆபிஸ் எதிரில், வார்டு எண்**.48** குண்டுமாச்சான்பட்டி பகுதிகளில் மின் மோட்டார்கள் பழுதடைந்து மீண்டும் பழுதுபார்த்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளது. இதைப்போல மின் மோட்டார்களை அகற்றி புதியதாக **8** மின் மோட்டார்கள் பொருத்துதல், கேபிள்கள், Column UPVC Pipe மாற்றுதல்பணிக்கு முதன்முறையாக **09.09.2024**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன**.** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது**.**

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ 8.50 லட்சம்</u>**

1. M/s.Malliga Engineering Contractor. Karur மதிப்பீட்டைவிட **0.02**%சதம் குறைவு
2. Thiru.M.Loganathan. Karur மதிப்பீட்டைவிட 0.85%சதம் அதிகம்

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மேற்படி பணிக்கு இம்மாமன்றம் தீர்மானம் எண்**.1955**, நாள்**.08.08.2024**ம் தேதி ரூ**.8.50** லட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்**.**

2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Malliga Engineering Contractor. Karur அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும், மாமன்றம் அனுமதிக்கலாம்

(இ3/3668 /2024)

**தீர்மான எண்.2019** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

33)கரூர் மாநகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகன எண். TN47 AH8849 Compactor Lorry வாகனத்திற்கு Diesel Pump Servic பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்வதற்கு வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான Jailaxmi Auto Works & Agencies (P) Ltl,d, Karur அவர்களின் நிறுவனத்திடம் மேற்படி நேரடியாக மதிப்பீட்டு பட்டியல் பெற்று பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.32420/– (முப்பத்தி இரண்டாயிரத்து நானூற்று இருபது மட்டும்) மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்,

மேற்படி தொகையினை இம்மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (4126/2024/இ7)

**தீர்மான எண்.2020** அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது

34)திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

13வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் மோட்டார் பழுதாகி உள்ளது அதனை சரி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

1.சணபிரட்டி பாரதியார் நகர் சமுதாயக்கூடத்தின் அருகில் உள்ள சின்டெக்ஸ் மோட்டார் பழுதாகி (4 1/2 மாதம் ஆகிறது)

2.பாதையூர் சமுதாயகூடம் அருகில் உள்ள சின்டெக்ஸ் மோட்டார் பழுதாகி 30 நாட்களுக்கு மேல் ஆகிறது.

3.சணபிரட்டி சுடுகாட்டில் உள்ள சின்டெக்ஸ் மோட்டார் பழுதாகி ஒரு மாதத்திற்கு மேல் ஆகிறது.

4.அனைத்து சின்டெக்ஸ் தளங்களும் உடைந்து மோசமான நிலையில் உள்ளது. அதனை சரி செய்து குழாய்கள் பொருத்தி தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2021** திருமதி.சரண்யாகுழந்தைவேல் 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி 12வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

35). திரு.M.சரவணன் 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

1வது வார்டு கந்தன்கார்டன், கோதையூர் வைரம் கார்டன், சின்ன கோதூர், கிரீன்சிட்டி ஆகிய பகுதிகளில் புதிதாக கம்பம் அமைத்து மின் விளக்கு அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2022** திரு.M.சரவணன் 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.க.வடிவேல் அரசு 2வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

36). திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

21வது வார்டுக்குட்ப்பட்ட வெங்கடேஸ்வரா ரோட்டில் உள்ள பொது கழிப்பிடத்தை இடித்து இன்னும் புதுப்பிக்கப்படாமல் உள்ளது. 1 வருட காலமாக பொதுமக்கள் பயன்பாடின்றி உள்ளது. ஆகவே அவசர தேவையினை கருத்தில் கொண்டு புதிதாக கட்டி தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

வெங்கடாசலம் சந்தில் 20 வீடுகளுக்கு மேடான பகுதியாக இருப்பதால் தண்ணீர் செல்வதில்லை. இது பல வருட பிரச்சனையாக உள்ளது. இதற்கு தீர்வாக அந்த பகுதியில் Reducer வைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2023** திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ச.பிரேமா 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

37) திரு.M.தண்டபாணி 41வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

41வது வார்டு பகுதியில் ஒரு அங்கமான NGGO நகரில் மனைப்பிரிவு பிரிக்கும் பொழுது பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கி உள்ள இடம் சர்வே எண்.471–475 நெம்பரில் உள்ளது. அந்த இடம் தற்பொழுது காலியாக உள்ளது. இந்த இடத்தில் நடைபயிற்சி பயன்பாட்டிற்காக கே.வி.பி வங்கி (KVB) தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு மக்களின் பயன்பாட்டிற்கு பொது நிதியிலிருந்து ஒதுக்கி தருமாறு கேட்டுக்கொண்டோம். கே.வி.பி வங்கி (KVB) நிர்வாகமும் தங்களுக்கு நிதி ஒதுக்கி தருகிறோம் என்று ஒப்புகொண்டனர். ஆகவே ஆணையர் அவர்கள் மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள பொது இடத்திற்கான ஆவணங்களை வழங்கி அவ்விடத்தில் நடைபயிற்சி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2024** திரு.M.தண்டபாணி 41வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.செ.கார்த்திக்குமார் 42வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

38)திரு.M.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் வெங்கமேடு 5வது வார்டு பகுதியில் அமைந்துள்ள

- எம்,கே நகர் 1வது கிராஸ், 3வது கிராஸ்,
- எஸ்.பி.காலனி 2வது கிராஸ்,
- கொங்கு நகர் 1,3 வது கிராஸ்
- அம்மன் நகர் 2வது தெருவில் இருக்கும் 1,2,3,4வது கிராஸ்,
- அண்ணா காலனி மெயின்,
- ராஜ் கார்டன் – 2
- சிட்டிகார்டன் – 2

ஆகிய பகுதிகளில் இருக்கும் மொத்தம் 14 பாலங்கள் பழுதடந்து உள்ளதால் சாக்கடை தண்ணீர் வடிகாலில் நிரம்பி சாலைகளில் ஒடுவதால் பொது மக்களுக்கு போக்குவரத்துக்கு இடையூராக உள்ளது. பழுதடைந்துள்ள பாலங்களை அப்புறப்படுத்திவிட்டு புதிய பாலங்களை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2025** திரு.M.பாண்டியன் 5வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.செ.மாரியம்மாள் 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**39)** திரு.அருள்மணி கனகராஜ் **19**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

1. கொளந்தானூர் முகப்பு சாலையை தார் சாலையாக மாற்றித்தரவும்.
2. கொளந்தானூர் குட்டியப்பன் சந்து சிமெண்ட் சாலையாக மாற்றித்தரவும்.
3. கொளந்தானூர் பகவதிஅம்மன் கோவில் பின்புறம் கார்கார வீதியில் தார்சாலையாக மாற்றித்தரவும்.
4. ராமானூர் RPK நகர் வீதியில் மண்சாலையை தார் சாலையாக மாற்றித்தரவும்.
5. சங்கர் நகர் பகுதியில் **30** ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட மழைநீர் வடிகால் முழுவதும் சேதமடைந்து உள்ளது. ஆகவே மழைநீர் வடிகால் வசதி அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2026** திரு.அருள்மணி கனகராஜ் **19**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திரு.கே.சக்திவேல் **17**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**40)**திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

கரூர் மாநகராட்சி **13**வது வார்டு பகுதியில் கீழே குறிப்பிட்டுள்ள தார்சாலைகள் நீண்ட காலமாக சீரமைக்காமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஆகையால் தாங்கள் தயவு கூர்ந்து பின்வரும் சாலைகளை உடனடியாக சீரமைத்து கொடுக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

1. தொழிற்பேட்டை சிலோன் காலனி மெயின்ரோடு
2. பசுபதிபாளையம் விசுவாசபுரம் மெயின் சாலை
3. தொழிற்பேட்டை இந்திராக்காலனி முக்கியச்சாலை
4. சணபிரட்டி தேவேந்திரர் நகர் சாலை
5. நல்லப்பநகர் ரோடு **100** மீட்டர் விஸ்தரிப்பு செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2027** திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளா பெரியசாமி **12**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**41)**திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

**1.** வீரப்பத்திர சந்து மற்றும் கிழக்கு நஞ்சையா தெருக்களில் பாதாள சாக்கடை சரி செய்ய பள்ளம் தோண்டினர் அதில் பெரிய குழிகள் மற்றும் Champerல் சிலாப்புகள் உடைந்து பொதுமக்கள் நடந்து செல்ல வசதி இல்லாமல் உள்ளதால் சரி செய்து கொடுக்கவும்.

**2.**சாத்தாணி சந்தில் சாக்கடை மிகவும் மோசமான நிலையில் உள்ளது இதனால் கொசுக்கள் அதிகரித்து பொதுமக்கள் அவதிபடுகின்றனர். ஆகவே இந்த மழைநீர் வடிகாலை போர்கால அடிப்படையில் சரி செய்து தரவும்.

**3.** மேற்கு நஞ்சையா தெரு, கிழக்கு நஞ்சையாதெரு, ஜவஹர் பஜார், வெள்ளையப்பர் சந்து, குருநாதன் தெரு போன்ற பகுதிகளில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி உள்ள சுற்றுசுவர்கள் எந்த நேரத்திலும் கிழே விழும் நிலையில் உள்ளது. அதையும் உடனடியாக சரி செய்து தரவும்.

**4.**அர்ச்சனா அருகே உள்ள மார்கெட்டிற்கு செல்லும் வழியில் மழைநீர் வடிகால் மிகவும் மோசமான நிலையில் உள்ளது இதை போர்கால அடிப்படையில் புதியதாக கட்டி தரவும் இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2028** திருமதி.வெ.நந்தினி **21**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ச.பிரேமா **22**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

42)திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

21வது வார்டுக்குட்ப்பட்ட அங்கன்வாடி பள்ளியில் ஆஸ்பெட்டாஸ் சீட் அமைத்து இயங்கி வருகிறது அடிக்கடி மழை பெய்யும் போது பள்ளி முழுவதும் மழைநீர் தேங்கி குழந்தைகள் சிரமத்திற்கு ஆளாகின்றனர் மற்றும் சமையலறையில் கைகழுவும் தொட்டி சரி வர அமைத்து தரவில்லை. கழிப்பிட வசதி சரிவர இல்லாமல் உள்ளது. ஆகவே தாங்கள் இதனை கருத்தில் கொண்டு உடனடியாக மேற்கூரை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2029** திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ச.பிரேமா 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

43)திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்.

21வது வார்டுக்குட்ப்பட்ட பகுதியில் வெங்கடேஸ்வரா சாலையில் கடைகள் ஆக்கிரமித்து உள்ளன. தற்சமயம் நமது மாநகராட்சியில் காமராஜ் மார்கெட் கட்டி முடிக்கப்பட்டு திறக்கும் தருவாயில் உள்ளது. காமராஜ் மார்கெட்டில் 174 கடைகள் திறக்கப்பட உள்ளதால் மார்கெட்டிற்கு வந்து செல்லும் வாகனங்கள், பொது மக்கள் வாகனங்கள் நிறுத்துவதற்கு இந்த சாலையில் அமைந்திருக்கும் கடைகள் இடையூராக உள்ளன. எனவே சாலையில் உள்ள கடைகளை அகற்றி சாலையை விரிவாக்கம் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.2030** திருமதி.வெ.நந்தினி 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.ச.பிரேமா 22வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மாநகராட்சி மேயர்

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி